செய்தி வெளியீடு எண். 48-2017 நாள்: 23.05.2017

# விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வை வலியுறுத்தும் வகையில் (காணொளி காட்சி) LED PROJECTOR பொருத்தப்பட்ட அறையினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.05.2017) திறந்துவைத்து, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்களின் வாகனங்களை ஆய்வு செய்தார்.

******

விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வை வலியுறுத்தும் வகையில் (காணொளி காட்சி) LED PROJECTOR பொருத்தப்பட்ட அறையினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.05.2017) திறந்துவைத்து, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்களின் வாகனங்களை ஆய்வு செய்தார்.

தமிழக அரசு உத்தரவுப்படி விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 1003 கல்வி நிறுவன வாகனங்களை மாவட்ட கண்காணிப்புக் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று (23.05.2017) காலை விழுப்புரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குட்பட்ட 227 வாகனங்கள் மாவட்ட காவல் துறை அணி வகுப்பு மைதானத்தில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட உத்தரவிடப்பட்டது. இன்றைய தினம் 165 வாகனங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இவற்றில் குறைகள் காணப்பட்ட 23 வாகனங்கள் குறைகள் சரிசெய்யும் பொருட்டு திருப்பி அனுப்பப்பட்டது. திருப்பி அனுப்பட்ட வாகனங்கள் வருகின்ற 31.05.2017 – ஆம் தேதிக்குள் குறைகளை சரிசெய்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டுமென உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், விழுப்புரம் வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வை பொதுமக்களுக்கு வலியுறுத்தும் விதமாக சாலை பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்ட (காணொளி காட்சி) LED PROJECTOR பொருத்தப்பட்ட அறையினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன் இ.ஆ.ப., அவர்கள் இன்று (23.05.2017) திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜெயகுமார் இ.கா.ப., துணைப் போக்குவரத்து ஆணையர் திரு.ஜெயசங்கர், விழுப்புரம் கோட்டாட்சியர் திருமதி.ஜூனத்பானு, திருக்கோவிலூர் கோட்டாட்சியர் திருமதி.செந்தாமரை, விழுப்புரம் துணை காவல் கண்காணிப்பாளர் திரு.சங்கர், மாவட்ட கல்வி அலுவலர் திரு.இராஜமாணிக்கம், வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.பாலகுருநாதன், மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்கள் திரு.சிவக்குமார், திரு.ரவிச்சந்திரன் உடன் இருந்தனர்.

----------------------------------------------------------------------------------------------------------------------------------

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.